பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 15 | திங்கட்கிழமை | 30.12.2024 | அதிர்வு 150

## ஓய்வுபெறுகிறார் சவேந்திர சில்வா

### சேவைக் கால நீடிப்பு இல்லை



ஜெனரல் சவேந்திர சில்வா பாதுகாப்புப் படைகளின் பதவி நிலைப் பிரதானி பதவியில் இருந்து 2025 ஜனவரி 05




# அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் மாகாண சபைகளுக்குத் தேர்தல்

## --- அநுர அரசு திட்டம் ---

**1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் கீழ், 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தை இரத்துச் செய்வதன் மூலம் நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.** 05

# மின்சாரம் தாக்கி மூவர் பரிதாபச் சாவு!

## புத்தளத்தில் துயரம்

மின்சாரம் தாக்கியதில் மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் புத்தளம் – பழைய மன்னார் வீதியில் 2ஆம் கட்டை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.



நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடத்தில் ஏறி நின்று வேலை செய்த இரும்பிலான பலாஞ்சியில் மீது மின்சாரம் பாய்ந்ததில் அதனைத் தூக்கிச் சென்ற 4 பேர் மீது மின்சாரம் தாக்கியுள்ளது. 05




மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அஞ்சலி செலுத்துவதற்காக புதுடில்லி சென்றிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அங்கு காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடன் சிறிது நேரம் தனியாக உரையாடி இருக்கிறார். அப்போது அரசியல் பற்றியும் பேசப்பட்டிருக்கின்றது.

புதுடில்லி அக்பர் சாலையில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் மன்மோகன் சிங்கின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த சமயம் அங்கு வைத்து நாமல் ராஜபக்ஷ அஞ்சலி செலுத்தினார்.

அதன் பின்னர் காங்கிரஸ் அலுவலகத்தின் அறை ஒன்றில் சோனியா காந்தி, ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் நாமல் ராஜபக்ஷவுடன் சற்று நேரம் உரையாடினர். சோனியா காந்தி ஒரிரு நிமிடத்தில் எழுந்து, அஞ்சலி செலுத்த வந்திருந்த ஏனைய தலைவர்கள், பிரமுகர்களைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றார். 05

யாழ் வடமராட்சி ஊடக இல்லம்
JAFFNA VADAMARADCHI MEDIA HOUSE
යාපන වඩමාරච්චි මාධ්‍ය මාලිගාව
பதிவு இல: DS/VOR/KVD/SS-2018-02

# தமிழ் ஊடகத்துறை மீது தொடரும் அச்சுறுத்தல்கள்: தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கை வேண்டும்!

## ஜனாதிபதியிடம் யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்து



"தமிழ் ஊடகத்துறை மீது காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில் தொடரும் அச்சுறுத்தல் நிலையை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கும் அதற்கு காரணமானவர்களைப் பாரபட்சமின்றி சட்டத்தின் முன்நிறுத்தி உரிய நீதியை வழங்குவதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தியுள்ளது.

சுயாதீன ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதலைக் கண்டித்து யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"தமிழ் ஊடகத்துறை பல்வேறுபட்ட நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் சுயாதீன ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனைக் கடத்த முயற்சித்த நிலையில் அவர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடரும் அச்சுறுத்தல் நிலையின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

சமூக மட்டத்திலும் நிர்வாக கட்டமைப்புகளிலும் இடம்பெற்று வரும் பல்வேறு சமூகவிரோத செயற்பாடுகள், முறைகேடுகளை பகிரங்கமாக ஊடக அறிக்கையிடல் மூலம் வெளிப்படுத்தி வரும் மு.தமிழ்ச்செல்வன் மீது கிளிநொச்சி நகரில் ஏ – 9 நெடுஞ்சாலையில் வைத்து பட்டப்பகலில் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் மற்றும் தாக்குதல் முயற்சி சட்டம் – ஒழுங்கை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

போர்க் காலத்திலும் அதன் பின்னரும் தமிழ் ஊடகத்துறை ஆயுத முனையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டும் அதன்காரணமாகப் பல ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டும், கடத்தப்பட்டும், சடலங்களாக வீசப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் வந்துள்ளனர்.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான காலத்தில் தமிழர் தாயகத்தில் வன்முறை கலாசாரம் திட்டமிட்டு ஊக்குவிக்கப்பட்டு வருவதும் அதன் பின்னணியில் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் சமூகவிரோத செயற்பாடுகள் சமூகமயப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆட்சி அதிகாரத்தில் உள்ளோரால் இவை கண்டும் காணாமல் விடப்படுகின்றமையும் அதற்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாது பாதுகாக்கப்பட்டு வருகின்றமையும் ஆட்சிகள் மாறினாலும் மாற்றமேதுமின்றி தொடர்கின்றமையானது அந்நிலையை மேலும் ஊக்குவிப்பதாகவே இருந்து வருகின்றமை எந்நிலையிலும் மறுக்கவே முடியாத பேருண்மையாகும்.

இவ்வாறான நிலையில் முன்னைய காலங்களில் ஆயுத முனைகளால் பேச முடியாதவற்றை தற்காலத்தில் வன்முறைச் சம்வங்கள் மூலமாக தமிழ் ஊடகத்துறையை மௌனிக்கச் செய்யும் உச்சபட்ட அடக்குமுறை செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. இவ்வாறான நிலையில் நிகழ்ந்துள்ள இந்தத் தாக்குதலானது ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலாகும்.

இந்தச் செயற்பாட்டைத் தனியே குறித்த ஒரு ஊடகவியலாளருக்கு எதிரான உரிமை மீறலாகக் கடந்து சென்றுவிட முடியாது. அந்தவகையில், சமூக விரோதச் செயற்பாடுகளைத் துணிச்சலுடன் வெளிச்சம் போட்டு காட்டிவரும் சுயாதீன ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் சம்பவத்தை யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசிலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்கின்றமை ஏமாற்றமே.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டு இருவர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் காரணமானது விடயத்தைத் திசைதிருப்பி உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கில் திட்டமிட்டுக் கூறப்பட்டிருப்பதாக, தாக்குதல் சம்பவத்தின் போது அவர்கள் வெளிப்படுத்திய வார்த்தைப் பிரயோகங்களின் பின்னணியில் ஆணித்தரமாக நம்பப்படுகின்ற நிலையில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எமக்கும் பலத்த ஐயம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே குறித்த கைது சம்பவத்தோடு மட்டுப்படுத்தப்பட்டதாக விசாரணை நடவடிக்கைகள் முற்றுப்பெறாது பின்னிருந்து செயற்படுத்திய உண்மைக் குற்றவாளிகளைக் கண்டறிந்து நீதி நிலைநாட்டப்படுவதனை உறுதி செய்யும் வகையிலானதாக முன்னெடுக்கப்பட வழிவகை செய்ய வேண்டும்.

தமிழ் ஊடகத்துறை மீது காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில் தொடரும் அச்சுறுத்தல் நிலையை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கும் அதற்கு காரணமானவர்களைப் பாரபட்சமின்றி சட்டத்தின் முன்நிறுத்தி உரிய நீதியை வழங்குவதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தத் தருணத்தில் யாழ். வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி நிற்கின்றது." – என்றுள்ளது.

# தேர்தல் செலவு அறிக்கையைக் கையளிக்காத வேட்பாளர்களின் தகவல்கள் பொலிஸாருக்கு




கடந்த பொதுத் தேர்தலில் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் தொடர்பிலான தகவல் அடங்கிய ஆவணத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்புமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்பின்னர், பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 8,361 வேட்பாளர்களில் 7,412 பேர் மாத்திரமே வருமானம் மற்றும் செலவு விபரங்களைக் கையளித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சுயேச்சை குழுக்களாகப் போட்டியிட்ட 197 வேட்பாளர்கள் இன்னும் அந்த அறிக்கையைக் கையளிக்கவில்லை.

வருமானம் மற்றும் செலவு விபரங்களைக் கையளிப்பதற்கான காலம் கடந்த ஆறாம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவு பெற்றது.

உரிய வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ள வேட்பாளர்களின் அறிக்கையின் தகவல்கள் தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் அது குறித்தும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

இதற்கமைய, தேர்தல் ஆணைக்குழு அல்லது பொலிஸாருக்கு அது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

# முட்டை, தேங்காயின் விலைகளில் வீழ்ச்சி



பண்டிகை காலத்தில் சந்தையில் முட்டையின் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம், தேங்காயின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், அரிசி பிரச்சினைக்கு இன்னும் தீர்வு எட்டப்படவில்லை.

சந்தைகளில் தொடர்ந்தும் பச்சை அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

சில வர்த்தக நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்குப் பச்சை அரிசி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

# 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய நடவடிக்கை



30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்தின் புதிய தலைவர் நந்தன திலக தெரிவித்துள்ளார்.

நாட்டில் உப்புக்கான பற்றாக்குறை ஏற்படும் நிலையில் அதற்குத் தீர்வாக, குறித்த தொகை உப்பு இறக்குமதி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேவையற்ற வகையில் உப்பைச் சேமித்து வைப்பதைத் தவிர்க்குமாறு, நந்தன திலக பொதுமக்களைக் கோரியுள்ளார்.

நேற்றைய தினம் பொறுப்புகளை ஏற்றதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டை உப்பு நிறுவனத்திடம் 6,000 மெற்றிக் தொன் உப்பு கையிருப்பில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த உப்பு கையிருப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் வரை போதுமானதாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.



# தேசிய மின் கட்டமைப்பிற்கு 500 மெகாவாட் மின் அலகை இணைக்க அரசாங்கம் எதிர்பார்ப்பு

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களின் மூலம் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் தேசிய மின் கட்டமைப்பிற்கு 500 மெகாவாட் மின் அலகை இணைக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி, தற்போது புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி சுமார் 1,400 மெகாவாட்டாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் இது தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சினை குறித்து அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது முதலீட்டாளர்கள் கணிசமான அளவு பங்குபற்றியுள்ளனர்.

பிராந்தியத்தில் அதிக அளவான எரிசக்தியினை செலவிடும் நாடாக இருந்த போதிலும், இந்த நிலைமையினை மாற்றி நியாயமான மற்றும் மலிவான விலையில் எரிசக்தியினை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி உற்பத்தியில் முதலீடு செய்ய முன்வரும் தனியார் துறைக்கு அரசாங்கம் போதுமான வசதி வாய்ப்புக்களை வழங்குவதாகவும் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி, இது அரசாங்கத்திற்கும் முதலீட்டாளர்களுக்கும் முன்னேற்றகரமான சூழ்நிலையை உருவாக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தச் சமயத்தில் நாமல் ராஜபக்ஷ, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் இலங்கை விவகாரத்தை ஒட்டிய அரசியல் குறித்து தமக்குள் பேசிக் கொண்டனர். அருகில் நாமல் ராஜபக்ஷவின் உதவியாளரும், அவரது கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான கீதநாத் காசிலிங்கம் உடன் இருந்தார்.

இலங்கை அரசியலில் நாமல் ராஜபக்ஷ மேலெழுந்து வர வேண்டுமானால் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை முன்னிறுத்தி அவர் செயல்பட வேண்டும் என்பதை ராகுல் காந்தி நாமல் ராஜபக்ஷவுக்குரிய ஆலோசனையாக வழங்கினார் எனத் தெரிகிறது.

இனப் பிரச்சினை தீர்வுக்காக முன்னெடுக்கப்படும் நேர்மையான முயற்சிகள் எல்லாவற்றுக்கும் தங்கள் தரப்பில் இருந்து ஒத்துழைப்பும் ஆதரவும் முழுமையாகக் கிடைக்கும் என்று நாமல் ராஜபக்ஷவுக்கு உறுதியளித்தார் ராகுல்காந்தி.

தீர்வு விடயத்தில் கடந்த காலத்தில் பிழை, சரி எல்லா பக்கங்களிலும் இருந்தாலும், எதிர்காலத்தில் சுமுக நிலைமையை ஏற்படுத்துவதற்கு எது சரி என்பதை அடையாளம் கண்டு, அதன்படி நகர வேண்டும் என்று நாமல் ராஜபக்ஷவுக்குக் ஆலோசனை கூறினார் ராகுல் காந்தி.

இலங்கை – இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியத் தரப்புக்கு கடிதங்கள் எழுத வேண்டும் என்ற கோரிக்கை இலங்கை மீனவர் அமைப்புகளில் இருந்தும் முன்வைக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டிய கீதநாத் காசிலிங்கம் அத்தகைய கடிதங்கள் ராகுல் காந்திக்கு கிடைத்தனவா என்று விசாரித்தார்.

உடனடியாக தமது உதவியாளர்களை அழைத்த ராகுல் காந்தி, அத்தகைய கடிதங்கள் வந்திருந்தால் அவற்றை தன்னுடைய விசேட கவனத்திற்கு கொண்டு வரும்படியும், இவ்விவகாரம் சுமூகமாக தீர்க்கப்படுவதற்கான முழு ஒத்துழைப்பையும் அழுத்தத்தையும் காங்கிரஸ் உரிய முறையில் வழங்கும் என்றும் அச்சமயம் பதிலளித்தார் எனத் தெரிய வந்தது.

## ஓய்வுபெறுகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

01ஆம் திகதி முதல் ஓய்வுபெறவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சவேந்திர சில்வாவின் சேவைக் காலத்தை கடந்த ஜுன் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீடித்திருந்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் திகதி முதல் 2022 மே 31 வரை ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாகப் பணியாற்றினார்.

அதன் பின்னர், தனது பதவிக்காலம் நிறைவடைய, 2022 ஜுன் முதலாம் திகதி பாதுகாப்புப் படைகளின் பதவி நிலை பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே அவரது பதவிக் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

அதனையடுத்து, தற்போது புதிய அரசு அமைந்திருக்கும் நிலையில் இவரது ஓய்வு தொடர்பில் தகவல் வெளியாகியிருக்கின்றது.

### மக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்த

# தனியார் பஸ் உரிமையாளரின் பயணிகள் அனுமதிப்பத்திரம் அதிரடியாக இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை 750 வழித்தடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்த தனியார் பஸ் உரிமையாளரின் பயணிகள் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன்,வடக்குமாகாணஆளுநர்நா.வேதநாயகனுக்கு அறிவித்துள்ளார்.

தனியார் பஸ் மேற்படி வழித்தடத்தில் சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பாக சமூக ஊடகங்களில் காணொளிகள் பகிரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அறிவுறுத்தியிருந்தார்.

இதற்கு அமைவாக முதல்கட்டமாக 29 sri 7911 என்ற தனியார் பஸ்ஸின் உரிமையாளரின் பயணிகள் அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் சாரதி, நடத்துனர் மற்றும் சிற்றூர்தியின் உரிமையாளர் மேலதிக நடவடிக்கைக்காக உரிய ஆவணங்களுடன் அதிகார சபைக்கு சமூகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

## அடுத்த ஆண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து, திருத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதி அமைச்சர் பிரபா ருவான் செனரத் தெரிவிக்கையில்,

“2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், மாகாண சபைத் தேர்தல் முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை இரத்துச் செய்து பழைய மாகாண சபைத் தேர்தல் முறைக்கு மாற்றுவதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களுக்குப் பிறகுதான் மாகாண சபைத் தேர்தல்களை எதிர்பார்க்க முடியும். எனினும், சட்டத்தில் பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்தாவிட்டால் நாங்கள் மாகாண சபைகளுக்கான தேர்தல் செயற்பாடுகளைத் தொடர முடியாது.

அதன் அடிப்படையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் முன்னாள் அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை முன்னெடுப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை அவசியமாகின்றது. ஆனால், அந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு முழுமையாக முடிந்திருக்கவில்லை.

அத்தோடு அவ்விடயம் ஒரு நகைச் சுவையாக மாறியுள்ளது. ஆகவே தான் அந்த ஏற்பாடுகளைத் திருத்தியமைத்து பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.” – என்றார்.

முன்னதாக, 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின்படி, நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் சமமான பிரதிநிதித்துவத்தை வழங்கும் குறிக்கோளுடன், எல்லைகளைத் அடையாளம் காண்பதற்காக ஜனாதிபதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமித்திருந்தார்.

இருப்பினும், எல்லை நிர்ணயத்தின் தேவை பல ஆண்டுகளுக்கு முன்பே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் நிறைவு செய்யப்படவில்லை.

2018இல் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு, இரண்டு மாதங்களுக்குள் புதிய எல்லைகளை இறுதி செய்யவிருந்தது. ஆனால், அதன் அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

இதன் விளைவாக, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஆயுட்காலம் நிறைவுக்கு வந்திருந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு முடிந்திருக்கவில்லை.

2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சட்டத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 2ஆம் எண் மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் பிரிவு 3ஏ(11)இல் திருத்தம் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா 2018இல் சமர்ப்பித்த எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை ஏகமனதாக நிராகரிக்கப்பட்டதோடு பைசர் முஸ்தபாவே அதற்கு எதிராக வாக்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பினும், அவர்களில் ஒருவர் தூக்கி விசப்பட்ட நிலையில், உயிர் பிழைத்துள்ளார். எனினும் ஏனைய மூவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# ஈழத்தின் வலிகளை எழுத்தின் மூலம் வெளிப்படுத்திய பல்துறை ஆளுமை

## நீர்வேலியில் இன்று யோகேந்திரநாதனின் இறுதி நிகழ்வு

"ஈழத்தின் வலிகளை எழுத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்த பல்துறை ஆளுமைமிக்க மூத்த படைப்பாளியும் ஊடகவியலாளருமான நா.யோகேந்திரநாதன் (வயது 80) நேற்று பல கேள்விகளுடன் விடையின்றி இந்த மண்ணை விட்டுச் சென்றமை ஈழ இலக்கியத்துறைக்கு பெரும் இழப்பாகும். அவரின் இழப்பில் எமது ஆழ்ந்த துயரை அனைவருடனும் பகிர்ந்துகொள்கின்றோம்."

– இவ்வாறு யாழ். ஊடக அமையம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"யாழ்ப்பாணம், வடமராட்சி, கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட நா.யோகேந்திரநாதன் கிளிநொச்சி – திருவையாறு தபாலகத்தின் உதவித் தபால் அதிபராகப் பணியாற்றியிருந்தார்.

1960 களில் நிலம் புலம் சார்ந்து எழுத்தின் மூலம் ஈழ உலகை வடிவமைக்கும் இலக்கியத் துறைக்குள் அவர் பிரவேசித்தார்.

இலங்கை வானொலியில் நாடக எழுத்தாளராகப் பணியாற்றிய அவர், போர்க்காலத்தில் "புலிகளின் குரல்" வானொலியில் நாடக எழுத்தாளராகவும் தயாரிப்பாளராகவும் கடமையாற்றினார்.

உயிர்த்தெழுகை, உயிர் குடிக்கும் பறவைகள், சாம்பல் பறவைகள், காவல் வேலி போன்ற நாடகத் தொடர்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன.

கண்ணீர் மழலைகள், விடுதலை முழக்கம் உட்பட பல தொடர் நவீனங்களை எழுதிய அவர் பல நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் படைத்துள்ளார். போர்க் காலத்தில் பல வீதி நாடகங்களையும் உருவாக்கியிருந்தார்.

1993 இல் ஈழநாதம் நாளிதழ் வன்னிப் பிராந்தியத்துக்கான பதிப்பைத் தொடங்கியபோது 1995 வரை அதன் ஆசிரியராகவும், யாழ்ப்பாணத்தில் வெளிவந்த "புதுவிதி" வார இதழின் கௌரவ ஆசிரியராகவும் பணியாற்றினார்.


யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகளில் சந்திரசேகர ஆசாத், யோகநாராயணன், விஷ்ணுபுத்திரன், அக்கினீஸ்வரன் என்ற புனைபெயர்களிலும் நா.யோகேந்திரநாதன் என்ற இயற்பெயரிலும் அரசியல் கட்டுரைகளை அவர் எழுதினார்.

சமூக ஒடுக்குமுறையை வெளிப்படுத்தும் விதமாக இடிபடும் இரும்புக் கோட்டைகள் என்ற நாவலையும் அவர் படைத்திருந்தார்.

அவர் எழுதிய 3 நாவல்கள் தேசிய ரீதியில் விருதுகளை வென்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இலங்கை வானொலியில் ஒலிப்பரப்பான காட்டு நிலா என்ற வானொலி நாடகம் நூலாக வெளியாகியிருந்தது.

தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஆவணமாக்கும் பெருமுயற்சியில் அளப்பரிய பங்காற்றிய அவர், போராட்ட வரலாற்றை மையமாகக் கொண்டு நீந்திக் கடந்த நெருப்பாறு, (முள்ளிக்குளத்திலிருந்து கிளிநொச்சி வரை), நீந்திக் கடந்த நெருப்பாறு (கிளிநொச்சியிலிருந்து புதுமாத்தளன் வரை), மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு போன்ற நாவல்களைப் படைத்திருந்தார்.



கடும் சுகயீனத்தால் பாதிக்கப்பட்டிருந்த வேளையிலும் ஆனையிறவை வெற்றிகொண்ட வரலாற்றை வெளிப்படுத்தும் விதமாக 39 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவலை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

யோகேந்திரநாதன் படைப்புத்துறை தவிர்த்து கூத்துக் கலைஞராக, அரங்க நாடக நடிகராக, வீதி நாடகத் தயாரிப்பாளராக, வானொலி நாடக தயாரிப்பாளராக, குரல் வழங்குநராக, சிறந்த விமர்சகராக, பேச்சாளராக எனப் பல்துறை ஆளுமையாளராக மிளிர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இடது சாரிக் கொள்கையை மாறாத பற்றுடன் தன் வாழ்நாள் முழுவதும் பின்பற்றிய அவர் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக அளப்பரிய பங்காற்றினார்.

இதனால் பல்வேறு இன்னல்களுக்கும் அவர் முகம் கொடுத்திருந்தார்.

தனது கனதியான படைப்புகள் மூலம் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வலுச் சேர்த்த அவர், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் மதிப்பளிக்கப்பட்டார்.

யாழ். ஊடக அமையம் தமிழ்த் தேசியத்தின் அர்ப்பணிப்புமிக்க ஆளுமைகளை வாழ்நாளில் கௌரவிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் அவரின் ஊடக பணிக்காக விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது." – என்றுள்ளது.

யோகேந்திரநாதனின் பூதவுடல் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.



# 2025 புது வருடம் பிறக்கவுள்ள நிலையில் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு

புது வருடத்திற்காகப் பொது மக்கள் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அதிகளவில் செல்கின்றனர்.

இதன்போது, அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இவ்வாறான பின்னணியில் சந்தையில் பல்வேறு அசௌகரியங்களை நுகர்வோர் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, தனியார் துறையினரால் இதுவரை 75,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாடு காரணமாக அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தனியார் தரப்பினருக்கு அனுமதி வழங்க மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 32,000 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 43,000 மெற்றிக் தொன் நாடு அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.



# உடல் பயிற்சியில் ஈடுபடுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மத்தியில் தொற்றா நோய்கள் வேகமாக பரவி வருவதால், உடல் பயிற்சிகளில் ஈடுபடுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரியவினால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை உடல் பயிற்சிகளில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாற்றம் எங்கே?

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தென்னிலங்கையில் வெடித்த அறகலயப் போராட்டம் சுமார் ஆறாயிரம் அரசியல்வாதிகளை அரசியல் நடவடிக்கைகளில் இருந்து தள்ளிப் போக - விலகச் செய்ய - வைத்திருப்பதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்குரிய மக்கள் செயற்பாட்டு மையத்தின் ('பவ்ரல்' அமைப்பின்) நிறைவேற்று இயக்குனர் றோஹண ஹெட்டியாராய்ச்சி கூறியிருக்கிறார்.

மீண்டும் தேர்தலில் வெல்வதற்கு - மக்களால் தெரிவு செய்யப்படுவதற்கு - தங்களுக்கு வாய்ப்பு அடியோடு இல்லை என்பதை நன்கு புரிந்து கொண்டமையால் - வேறு வழியின்றி அவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி கொண்டிருக்கிறார்கள் என அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

அவர்களின் பலர் அரசியலில் முன்னணி நிலையில் இருந்தவர்கள். கட்சிகளின் தலைவர்கள். அவர்கள் ஒதுங்க வேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்த்து இருந்தார்கள். அரசியலில் இருந்தவரையில் சுருட்டி கொள்ளக் கூடியவற்றை சூறையாடிக் கொண்டவர்கள். இனிமேல் இடம் இல்லை என்பது புரிந்ததும் - அதற்கு மக்கள் இடம் அளிக்க மாட்டார்கள் என்பது தெரிந்ததும் - மெல்லக் கழன்று கொண்டிருக்கிறார்கள்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் வடக்குக் கிழக்கிலும் கூட அந்த உணர்வு நிலை வராமல் இல்லை.

இப்படி பல அரசியல்வாதிகள் ஒரேயடியாகக் களத்தை விட்டு அகன்றமை மக்கள் எதிர்பார்த்ததும், அவர்கள் விரும்பியதும் தான்.

ஆனால், மக்களின் எதிர்ப்புப் புரட்சியில் அவர்கள் ஒரேயடியாக அடிபட்டு போயிருந்தாலும், இலங்கை அரசியலில் அத்தகையோரின் மீள் வருகை - மீளெழுச்சி - சில சமயங்களில் இடம் பெறாமல் இல்லை.

கடலில் அள்ளுண்டு போனவை மீண்டும்காலம்கழித்துகரைஒதுங்குவதுபோல, மக்களின் எழுச்சியில் அள்ளுப்பட்டுத் தூக்கி வீசப்பட்டவர்கள் மீண்டும் கரை ஒதுங்கி வெளிப்படக் கூடிய வாய்ப்பு உண்டு.

2015இல் அரசியலில் ஒதுக்கப்பட்ட ராஜபக்ஷக்கள், 2018 இல் உள்ளூராட்சித் தேர்தலோடு புனர் ஜென்மம் பெற்று, புத்தெழுச்சியுடன் வந்தமை மறக்கக் கூடியது அல்ல.

முடிகின்ற இந்த ஆண்டின் இறுதியில் முடிவாகிப்போன அரசியல் கலாசார மாற்றம் பயனற்றுப் போகக் கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன. கடைசியில் விவகாரம் மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாகி விடக் கூடிய சூழல் உண்டு.

நாட்டின் ஆட்சித் துறையில் ஒவ்வொரு பிரிவிலும் புரட்சிகர மாற்றத்தை உறுதியளித்த தற்போதைய ஆட்சிப் பீடம் - தேசிய மக்கள் சக்தி அரசு - அத்தகைய மாற்றங்களில் முனைப்பு காட்டுவதாகத் தெரியவில்லை. முன்னைய அரசுகள் பின்பற்றிய அதே பாதையைப் பல துறைகளிலும் இந்த ஆட்சிப் பீடமும் அப்படியே கைகொண்டு தொடர்வதாகவே தெரிகிறது.

நாட்டை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிய பொருளாதார நிலைமைகளைப் பொறுத்தவரை முன்னைய அரசின் கொள்கைகள், திட்டங்களை அப்படியே பின்பற்றும் எண்ணமும் நோக்கமுமே இந்த ஆட்சி பீடத்திற்கும் இருப்பதாகத் தோன்றுகின்றது.

அரிசியை உள்ளூரில் உற்பத்தி செய்து நெருக்கடியை தவிர்ப்போம் என்று சூளுரைத்த தேசிய மக்கள் சக்தி அரிசி ஆலை உரிமையாளர்களின் ஏகபோகத்தை கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கின்றமை அப்பட்டமாக வெளிப்படுகின்றது. இப்பிரச்சினைக்கு தீர்வாக அரிசி இறக்குமதியை அது நாடி இருக்கின்றது.

அதேபோல வெளியுறவுக் கொள்கை உட்பட பழைய அரசுகளின் நிலைப்பாட்டையே இந்த அரசும் தொடர விரும்புவது அப்பட்டமாகத் தெரிகின்றது.

அப்படிப் பார்த்தால் இப்போதைய புதிய ஆட்சி என்பது 'புதிய மொந்தையில் பழைய கள்' என்ற கதைதான்...!



# கறுவாச் செய்கையை விரிவுபடுத்த நடவடிக்கை

நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றான கறுவாச் செய்கையின் மூலம் வருடத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கறுவா உற்பத்தி வருடத்திற்கு 25,000 மெற்றிக் தொன்களாகும்.

இதில் கிட்டத்தட்ட 19,000 மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கறுவாப்பட்டை ஏற்றுமதி மூலம் இலங்கை தற்போது சுமார் 250 மில்லியன் டொலர் அந்நிய செலாவணியை ஈட்டி வருவதாக கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார்.

வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, பாரம்பரியமாக கறுவா பயிரிடப்பட்டு வரும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கு மேலதிகமாக குருநாகல், புத்தளம் மற்றும் மகாவலி பிரதேசங்களில் கறுவாப்பட்டை செய்கையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார்.




# போக்குவரத்து விதிகளை மீறிய 8000 பேருக்கு எதிராக நடவடிக்கை

கடந்த 24 மணித்தியாலங்களில் போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 8 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது

பண்டிகை காலத்தில் வீதி விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளும் நோக்கில் பொலிஸாரால் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 8068 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மதுபோதையில் வாகனம் செலுத்திய 401 பேரும், அதிக வேகத்துடன் வாகனம் செலுத்திய 101 சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# திருக்குறளின் துணையோடு எதேச்சதிகாரத்தை வெல்வோம்

## தொண்டர்களுக்கு ஸ்டாலின் கடிதம்

“திருக்குறளில் உள்ள அதிகாரங்களைத் துணையாகக் கொண்டு எதேச்சதிகாரத்தை வெல்வோம். வள்ளுவம் போற்றி வாழ்க்கை சிறந்திட அனைவருக்கும் 2025 புத்தாண்டு நல்வாழ்த்துகள்.”

– இவ்வாறு தி.மு.க. தொண்டர்களுக்கு அக்கட்சித் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

கன்னியாகுமரியில் இன்று முதல் திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழா நடைபெறவிருப்பதை ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“உலகப் பொது மறையாம் திருக்குறளை வழங்கிய திருவள்ளுவர் தமிழர்களின் உலக அடையாளமா-கத் திகழ்கிறார். உலக வாழ்வியலுக்கான பொது முறையை வழங்கும் அறநெறிகளைக் கொண்ட திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் உலகளாவிய புகழ் சேர்த்திடும் வகையில், முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலையை நிறுவியவர் கலைஞர்.

குமரி முனை சிலையின் தலை வரை ஆழிப்பேரலை தாக்கிய போதும், அதனை எதிர்கொண்டு எவ்வித சேதாரமுமின்றி கம்பீரமாக நின்றார் திருவள்ளுவர். காலத்தால் அழியாத காவியமாக நிலைப்பெற்றுவிட்ட அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு, இது வெள்ளி விழா ஆண்டு. திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது.

கால் நூற்றாண்டு காலத்தை கடந்து, இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கவிருக்கும் சிலைக்கு, பேரறிவுச் சிலை எனப் பெயர் சூட்டி விழா எடுத்து மகிழ்கிறது திராவிட மொடல் அரசு.

உயர்ந்து நிற்கும் திருவள்ளுவர் சிலை போல தமிழ்நாடும் தமிழர்களும் நாளும் உயர்ந்திட வேண்டும், அதற்கேற்ப வள்ளுவர் வழங்கிய திருக்குறளின் நெறி போற்றி நாம் வாழவேண்டும். தமிழின் சிறப்பை உலகம் உணர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் வெள்ளிவிழா கொண்டாடப்படுகிறது. விழா நாட்களில் மட்டுமல்ல எல்லா நாட்களும் திருக்குறளைப் போற்றுவோம். அதன் வழி நடப்போம்.

திருவள்ளுவர் சிலை, ஆழிப்பேரலையை எதிர்கொண்டு உயர்ந்து நிற்பதுபோல தமிழ்நாடும் தடைகளைத் தகர்த்து முன்னேறும். திருவள்ளவர் வழங்கிய திருக்குறளில் உள்ள அதிகாரங்களைத் துணையாகக் கொண்டு எதேச்சதிகாரத்தை வெல்வோம். வள்ளுவம் போற்றி வாழ்க்கை சிறந்திட அனைவருக்கும் 2025 புத்தாண்டு நல்வாழ்த்துகள்.” – எனறார்.



# மத்திய பிரதேசத்தில் ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் ஒருவர் உயிரிழப்பு




மத்திய பிரதேசத்தில் 140 அடி ஆழ் ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 10 வயது சிறுவன் பல மணி நேர போராட்டத்துக்கு பிறகு மீட்கப்பட்ட நிலையில், அவர் உயிரிழந்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், குணா மாவட்டத்தில் 140 அடி ஆழ ஆழ்துளை கிணறு அருகே, சுமீத் மீனா என்ற 10 வயது சிறுவன் நேற்று முன்தினம் விளையாடிக் கொண்டிருந்த போது சிறுவன் நிலைதடுமாறி ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்துள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு, விரைந்த மீட்பு படையினர் சிறுவனை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்நிலையில் பல மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் நேற்று காலை 9.30 மணி அளவில் சிறுவன் மீட்கப்பட்டார்.

சுமார் 140 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் சிறுவன் 39 அடி ஆழத்தில் சிக்கிக் கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனை மீட்க 22 அடி ஆழ குழி தோண்டப்பட்டது எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆழ்துளை கிணறு மூடாமல், திறந்து இருந்ததுதான் விபத்துக்கு காரணம் என கூறப்படுகிறது.

மருத்துவர்கள் சிறுவன் உயிரை காப்பாற்ற முயன்றும், சிறுவன் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.




# தென் கொரியாவில் விமான விபத்தில் பலியானவர்கள் 179 ஆக அதிகரிப்பு

## ஏழு நாள்களுக்கு துக்க தினம்



தென் கொரியாவில் உள்ள முவான் சர்வதேச விமான நிலையத்தில் பெங்கொக் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதை அடுத்து அங்கு எதிர்வரும் ஏழு நாள்களுக்கு தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன்படி, அனைத்து அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடி அரைகொடிக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த நிலையில், குறித்த விபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 179 ஆக அதிகரித்துள்ளது.

இந்த விமானம் ஓடுபாதையிலிருந்து விலகி, தென்கொரிய – முவான் சர்வதேச விமான நிலைய சுற்று சுவரில் மோதியதை அடுத்தே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது

மோதியதை அடுத்து விமானம் தீப்பற்றியதனாலேயே அதிக அளவிலான உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பல்வேறு தரப்பினரும் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இதன்படி, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் உயிரிழந்தவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இரங்கல் தெரிவித்துள்ளார்

அத்துடன், தென் கொரியாவில் விமானம் விபத்துக்குள்ளானதில் தாம் மிகுந்த வருத்தம் அடைவதாக பிரித்தானிய வெளியுறவுத்துறை செயலர் டேவிட் லாம்மி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், விமானம் விபத்துக்குள்ளான போது, அந்த விமானத்தில் மொத்தமாக 181 பேர் இருந்துள்ளனர் எனவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் தென் கொரியாவை சேர்ந்தவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாரிய பறவை ஒன்று தாக்கியதாகவும், மோசமான வானிலையே விபத்திற்கான காரணம் என தீயணைப்பு துறை சந்தேகம் வெளியிட்டுள்ளது.

எப்படியிருப்பினும், உறுதியான காரணத்தை அறியும் நோக்கில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் கொரியாவின் பதில் ஜனாதிபதி சோய் சாங்-மோக் விபத்து நடந்த இடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் மீட்பு பணி நடவடிக்கைகளுக்கு சகல வளங்களையும் பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என அந்த நாட்டு ஜனாதிபதியின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கனடாவில் விமானமொன்றின் இயந்திரப் பகுதியில் தீப்பரவல்




கனடாவின்விமானசேவைக்குசொந்தமான விமானமொன்றின் பிரதான இயந்திரப் பகுதி தீப்பற்றிய சம்பவம் ஒன்று நேற்று பதிவாகியுள்ளது.

விமானம் தரையிறங்கும் போது விமானத்தின் கியர் செயலிழந்தமையைத் தொடர்ந்து இந்த தீ விபத்து நிகழ்ந்துள்ளது.

கனடாவின் செயின்ட் ஜான்ஸில் இருந்து ஹாலிஃபாக்ஸ்/க்கு 80 பயணிகளுடன் பயணித்த விமானம் ஒன்றே இவ்வாறு தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

எவ்வாறாயினும் இந்த விபத்து சம்பவத்தில் எந்தவித உயிரிழப்புகளோ, காயங்களோ ஏற்படவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 30.12.2024




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். சில விஷயங்களில் விட்டுக்கொடுத்து செல்வது கூட உங்களுக்கு மன உளைச்சலைத் தரும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தவறுகள் நேராமல் இருப்பதற்கு சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சில ஈகோ பிரச்சினைகளை சந்திக்க நேரும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

வீட்டை பராமரிக்கும் அல்லது புதுப்பிக்கும் வகையில் செலவினங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். மகிழ்ச்சியான புது அனுபவங்கள் உங்களுக்கு காத்திருக்கின்றது.

பணியில் காணப்படும் வளர்ச்சி உங்களை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவதற்கான நேரம். இதனால் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

இன்று நீங்கள் விரும்பும் வகையில் பணம் செலவு செய்யும் அளவில் சுதந்திரம் காணப்படும். நீங்கள் பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

அமைதியான அணுகுமுறையை மேற்கொள்ளவும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீகம் சம்பந்தப்பட்ட பயணங்களுக்கு இன்றைய நாள் சிறந்தது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நீங்கள் நினைத்தது நடக்கும்.

பணியிடத்தில் சில மன உளைச்சல்கள் காணப்படும். பணியில் கூடுதல் சுமைகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை கவனமாக பகிர்ந்து கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது நல்லது.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தந்தையின் உடல் நலம் குறித்த செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உணர்ச்சிவசப்படுவீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்றைய நாள் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் வளர்ச்சி பற்றி கவலைப்படுவீர்கள்.

பணிகளைக் கையாளும் போது பொறுமை இழப்பீர்கள். இதனால் தவறுகள் ஏற்படும். எனவே கவனமாக பணியாற்றவும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

பணத்திற்கான சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. கடன்கள் ஏற்படும் வாய்ப்பும் அதிகமாக காணப்படுகின்றது.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் கடினமாக உழைத்து பலனை எதிர்பார்க்க வேண்டும். பாடல்கள் கேட்பது திரைப்படம் பார்ப்பது போன்றவற்றின் மூலம் அமைதியடையுங்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடனான தகவல் பரிமாற்றத்தில் தடைகள் ஏற்படும். நீங்கள் இதனை கவனமாகக் கையாள வேண்டும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை கண்காணிக்க வேண்டியது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளால் அவதிப்படுவீர்கள்.




இன்று நீங்கள் புதியதொரு வளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மூலம் வெற்றி காணலாம்.

பணியில் பெயரையும் புகழையும் சம்பாதிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி மகிழ சாத்தியம் உள்ளது. இதனால் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்புள்ளது.

பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று பயணங்கள் காணப்படுகின்றன. யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இசை விழாக்களில் பங்கு கொள்வது ஆறுதலைத் தரும்.

முறையான திட்டமிட்டு நேரத்தோடு செயல்பட்டால் எளிதாக பணியாற்றலாம்.

உறவில் கோபதாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் கவனமாகப் பழகுங்கள்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமானதாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கண்காணிக்க வேண்டும். நேர்மறையான அணுகுமுறை வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இன்று பனியின் போது சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். மேலதிகார்கள் ஆதரவு அவ்வளவாக காணப்படாது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் கவனமாக வெளிப்படுத்துங்கள்.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களை வருத்தத்திற்குள்ளாக்கும்

மன உளைச்சல் காரணமாக ஆரோக்கிய பாதிப்பு ஏற்படும். தூக்கமின்மை காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.12.2024




இன்று சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் அதுவும் உங்களுக்கு நல்லது.

இன்று பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை. இன்று பணிச் சுமை காணப்படும். நீங்கள் அதனை சாமர்த்தியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் உறவில் பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இதனை சரி செய்தால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நிதியைப் பொறுத்தவரை ஏற்றத்தாழ்வு காணப்படும். பணத்தைக் கையாளும்போது கவனம் தேவை.

இன்று குளிர்ந்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்றைய நாளை உங்கள் சுய வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். நேர்மையான முயற்சிகளால் விரும்பும் பலன்களை அடையலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் நல்ல பெயரையும் புகழையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களின் செலவிற்கான பணம்உங்களுக்கு கிடைக்கும். மங்களகரமான நிகழ்சிகளுக்கு பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் முயற்சியும் தன்னம்பிக்கையும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களைப் பார்த்து புன்னகை பூக்கும். உங்கள் முயற்சிகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

குடும்பத்தில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் ஒற்றுமையாக பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலை சுதந்திரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியுடனும் தன்னம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகளைக் கையாளும்போது கவனம் தேவை.

நீங்கள் சிறிது குழம்பி காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இதனால் உறவில் சில அசௌகரியங்கள் ஏற்படும்.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. இன்று பணம் குறைந்த அளவில் காணப்படும்.

ஜீரணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.



# ஆட்டோ திருட்டில் ஈடுபட்ட 5 சந்தேக நபர்கள் கைது

ஆட்டோ திருட்டில் ஈடுபட்டு வந்த 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

கொழும்பு மத்திய பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவினரால் கிரேண்ட்பாஸ் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, திருடப்பட்ட 9 ஆட்டோக்கள் கைப்பற்றப்பட்டதுடன் அவற்றை தம்வசம் வைத்திருந்த 4 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீதுவ, ஒருகொடவத்த, கொழும்பு 10 மற்றும் கொழும்பு 14 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு கோட்டை, கிரிபத்கொடை, வத்தளை, பொரளை ஆகிய பகுதிகளில் ஆட்டோக்களைத் திருடியுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.